# அதிரடி சோதனை

மனித வணிகத்துக்கு எதிரான செயல்உத்திகள்,
சுரண்டலுக்கான நடைமுறைகளுக்கு பாலியல் தொழிலாளர்கள்
பாதிப்புக்கு உள்ளாகும் நிலையை எப்படி அதிகரிக்கின்றன?



# அதிரடி சோதனை

## மனித வணிகத்துக்கு எதிரான செயல்உத்திகள், சுரண்டலுக்கான நடைமுறைகளுக்கு பாலியல் தொழிலாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகும் நிலையை எப்படி அதிகரிக்கின்றன?


**சுருக்கத்திரட்டு**

பெண்களின் அடிமைத்தனம் மற்றும் விபச்சாரம் ஒரு வன்முறையாக எப்படி இருக்கிறது என்பது மீதான விவாதங்கள் பல நேரங்களில் மனித வணிகத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மீதான கலந்துரையாடல்களை கவனத்தில் கொள்ளப்படாதவாறு அமுக்கிவிடுகின்றனர். இது, குழந்தைகளின் பாலியல் சுரண்டலோடு இணைத்து பேசப்படும்போது இது இன்னும் மோசமாகிவிடுகிறது. மனித வணிகம் மற்றும் பாலியல் தொழில் என்ற இரு விஷயங்களையும் இணைத்து பேசுவதற்கு மனிதவணிகத்திற்கு எதிரான முனைப்புத்திட்டங்களே பெரிதும் பொறுப்பானதாக இருந்திருக்கின்றன. இதன்மூலம் பாலியல் தொழிலையே ஒரு வன்முறையாக கருதுவது, பாலியல் தொழிலாளர்கள் மற்றும் மனித வணிகத்தில் ஈடுபடுத்தப்படும் நபர்களில் மனித உரிமைகளின் மீறல் உதாசீனம் செய்யப்படுகிறது.

மனித வணிகத்திற்கு எதிராக செயல்படும் அமைப்புகள் மற்றும் பாலியல் தொழிலாளர்கள் உரிமைகளுக்காக இயங்கும் அமைப்புகள் என ஒரு பிளவு ஏற்படுவதற்கு இது வழிவகுக்கிறது. இந்த பிளவே, பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு பதிலாக பாலியல் தொழிலை ஒழிக்க வேண்டுமென்று அறிவுறுத்துகிற செயல்உத்திகள் உருவாவதற்கும் வகை செய்திருக்கிறது. மனித வணிகத்திற்கு எதிரான இந்த பிரச்சாரமும், இலட்சக்கணக்கான புலம்பெயர்ந்த பெண்களின் வாழ்க்கை கதைகளையும், விவரணைகளையும் செல்லாததாக ஆக்கிவிட முற்படுகிறது. பாதுகாப்பான புலம்பெயர்தல் மற்றும் ஒரு வாழ்வாதாரத்தை தேர்வுசெய்வதற்கான உரிமையானது கலாச்சாரம் மற்றும் ஒழுக்கம் என்பவற்றின் மீதான குறுகிய கண்ணோட்ட கலந்துரையாடல்களால் தடங்கல் ஏற்படுத்தப்பட்டு வருவது தொடர்கிறது.

இந்த நடப்பு ஆய்வானது, அதிரடி சோதனைகளினால் மீட்கப்பட்டு மறுவாழ்வு வழங்கப்பட்ட பாலியல் தொழிலில் ஈடுபட்ட பெண்களின் அனுபவங்களை முன்னிலைப்படுத்தும் ஒரு முயற்சியாகும். பாலியல் தொழிலில் பெண்கள் ஈடுபடுத்தப்படுவதை எதிர்த்து போரிடுவதற்காக பயன்படுத்தப்படுகிற அதிரடி சோதனைகள், மீட்பு மற்றும் மறுவாழ்வுக்கான செயல்உத்திகளோடு சேர்த்து இந்த பெண்களின் விளக்கமான விவரணைகளையும் நாங்கள் ஆய்வுக்கு உட்படுத்துகிறோம். இந்த ஆய்வானது, பாலியல் தொழிலாளர்களின் வாழ்க்கை மீது இதற்குரிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளின் தாக்கத்தை வெளிக்கொணர்கிறது. அதிரடி சோதனை அங்கிருந்து மீட்கப்பட்டு பல்வேறு காலஅளவுகளுக்கு மறுவாழ்வு வழங்கப்பட்டு மற்றும் இப்போது மீண்டும் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களின் அனுபவங்களை மையமாகக் கொண்டதாக எமது ஆய்வு இருக்கிறது. இத்தகைய சிக்கலான விவரணைகள், மனித வணிகத்திற்கும் மற்றும் பாலியல் தொழிலில் தொடர்ந்து இருப்பதற்கான முடிவுக்கும் இடையே உள்ள ஒரு நேரியல்-அல்லாத உறவுமுறையை காட்டுகிறது.


**சூழல்**

மனித உரிமைகளுக்கான ஒப்பந்தம் மற்றும் சாசனங்கள் பெரும்பாலானவற்றில் இந்தியா ஆதரவை வெளிப்படுத்தி கையொப்பமிட்டிருக்கிறது. அவைகளின் அமலாக்க நிலை பற்றி குறிப்பிட்ட காலஅளவுகளில் அறிக்கைகளையும் அது வழங்கி வருகிறது. சமீப ஆண்டுகளில், பாலியல் தொழில் மீது நாட்டுக்குள் மனித உரிமைகள் கட்டமைப்பை தெளிவாக வெளிப்படுத்துதலை வலுப்படுத்துவதற்காக இத்தகைய ஒப்பந்த அமைப்புகளின் தகவலளிப்பு இயங்குமுறைகளோடு பாலியல் தொழிலாளர்களும், செயற்பாட்டாளர்களும் கலந்து பேசி வருகின்றனர். தேசிய மற்றும் உலகளாவிய அளவுகளில் மனித உரிமைகள் குறித்த ஆதரவு பிரச்சாரமானது, அரசமைப்பு சட்டத்தின் கீழ் குடிமக்களாக அவரது உரிமைகளை உறுதிசெய்வது மீது பாலியல் தொழிலாளர்கள் மனித உரிமைகளை மதிப்பதற்கான, பாதுகாப்பதற்கான, நிறைவேற்றுவதற்கான மற்றும் மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மூல ஆதாரமாக வைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இந்தியாவில் மனித வணிகத்திற்கு எதிரான கொள்கைகள், குறிப்பாக, விபச்சாரத்தொழில் (தடுப்பு) சட்டம், 1956 (The Immoral Traffic Prevention Act) (ITPA), மனித

வணிகத்தையும் மற்றும் பாலியல் தொழிலையும் ஒன்றாக இணைத்து பார்ப்பதோடு, மனித வணிகத்தில் ஈடுபடுத்தப்படும். பாதுகாக்க தவறுவதால் பாலியல் தொழிலாளர்களுக்கு எதிராக வன்முறை அதிகரிப்பதற்கு வழிவகுக்கிறது.

ஒரு வேடிக்கையான முரண்பாடாக, சுதந்திரத்திற்கு பிந்தைய 10 ஆண்டுகளுக்குள் ITPA சட்டம் நிறைவேற்றப்பட்டபோதிலும்கூட, 2013-ஆண்டுக்கு முந்தைய எந்தவொரு இந்திய சட்டங்களிலும், மனித வணிகம் என்பது எவற்றை உள்ளடக்கியது என மிகச்சரியாக, துல்லியமாக வரையறை செய்யப்படவில்லை. ITPA செயல்படுத்தப்படும்போது, பாலியல் தொழிலாளர்களின் தொழிலை குற்றச்செயலாக்குகிறது; அவர்களது குடும்பத்தினரை குற்றவாளிகளாக முத்திரை குத்தி குழந்தைகளை வளர்ப்பதற்கான உரிமையை, அந்தரங்க இரகசியம் காப்பதற்கான உரிமையையும், இழக்கச்செய்கிறது, வீடுகள் அல்லது வேறு எந்த இடத்திலும் நியாயமற்றவாறு அல்லது நிர்ப்பந்தத்தின் பேரில் வெளியேற்றப்படுவதையும் மற்றும் அகற்றப்படுவதையும் ஏதுவாக்குகிறது. அத்துடன், வயது வந்த நபர்களின் சம்மதத்தை செல்லாததாக ஆக்குகிறது. இதன் மூலம் பாலியல் தொழிலாளர்களின் வாழ்க்கையை பாதிப்புக்கு ஆளாக்குகிறது. மனித வணிகம் தொடர்பான சட்டங்களின் குறிக்கோள் மற்றும் இந்த சட்ட விதிகள் எதார்த்தத்தில் புரிந்துகொள்ளப்பட்டு, நீதிபதிகளின் குறிப்பிட்ட புரிதலின் அடிப்படையில் எப்படி வழக்குகள் முடிவுசெய்யப்படுகின்றன என்பதற்கும் இடையிலான இடைவெளியை இந்த ஆய்வு பகுப்பாய்வு செய்தது.

**ஆய்வு**

இந்தியாவில் மனித வணிகத்திற்கு எதிரான கொள்கைகள், குறிப்பாக, விபச்சாரத்தொழில் (தடுப்பு) சட்டம், 1956 (ITPA), மனித வணிகத்தையும் மற்றும் பாலியல் தொழிலையும் ஒன்றாக இணைத்து பார்ப்பதோடு, மனித வணிகத்தில் ஈடுபடுத்தப்படும். பாதுகாக்க தவறுவதால் பாலியல் தொழிலாளர்களுக்கு எதிராக வன்முறை அதிகரிப்பதற்கு வழிவகுக்கிறது.

இந்த ஆய்வானது, இந்தியாவில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், மனித உரிமைகள் ஆய்வு முகமைகள் மற்றும் பாலியல் தொழிலாளர் கூட்டமைப்புகள் ஆகியவற்றுக்கிடையிலான ஒரு கூட்டாண்மை செயல்பாட்டின் விளைவாகும். இந்த ஆய்வானது, பாலியல் தொழிலாளர்களின் வேஷ்யா அன்யய் முக்தி பரிஷத் (VAMP), இந்தியாவில் சங்ராம் (SANGRAM) என்ற அரசு சாரா தொண்டு நிறுவனம் மற்றும் நெதர்லாந்தைச் சேர்ந்த ரைட்ஸ்4சேஞ்ச் என்ற அமைப்புகளால் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. இந்தியாவில் இந்த ஆய்வுக்கான கூட்டாளிகளாக வேஷ்யா அன்யய் முக்தி பரிஷத், சஹேலி HIV/AIDS கார்யகர்த்தா சங் மற்றும் ஆதார் பஹுத்தேஷ்யா சன்ஸ்தா, மஹாராஷ்டிரா, உத்தர கர்நாடகா மஹிள ஒக்குட்டா, கர்நாடகா, கேரளா நெட்வொர்க் ஆ∴ப் செக்ஸ் ஒர்க்கர்ஸ், கேரளா மற்றும் ஸ்ரீஜன் ∴பவுண்டேஷன், ஜார்கண்டு ஆகியவை இருந்தன. இந்த ஆய்வு கீழ்க்கண்ட நோக்கங்களை இலக்காகக் கொண்டிருந்தது :

- இந்தியாவில் பாலியல் தொழிலாளர்களுக்கு சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தத்தை செயல்படுத்துவதை புரிந்துகொள்ளுதல்.
- மனித உரிமைகள் ஒப்பந்த கட்டமைப்பை பாலியல் தொழிலாளர்கள் புரிந்துகொள்ளவும் மற்றும் தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு செய்முறையை அர்த்தமுள்ளவாறு பங்கேற்பதையும் ஏதுவாக்குவது.
- அனைத்து குடிமக்களுக்கும் உரியதென்று குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளுக்கும் மற்றும் பாலியல் தொழிலாளர்களின் வாழ்க்கையில் அவைகளை பயன்படுத்துவதற்கும் இடையிலான இடைவெளிகளை அடையாளம் காண்பது.
- பாலியல் தொழிலாளர்களால் எதிர்கொள்ளப்படுகிற வன்முறை மற்றும் உரிமை மீறல்களை திரட்டி தொகுத்தல்.
- பாலியல் தொழிலாளர்களின் வாழ்க்கையில் அதிரடி சோதனைகளும் மற்றும் மீட்புக்கான நடவடிக்கைகளும் எப்படி பாதிக்கின்றன என்று ஆவணப்படுத்துதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.
- முழு ஒப்புதலுடன் செயல்படுகிற வயதுவந்த பாலியல் தொழிலாளர்கள் மீது எப்படி மனிதவணிகத்திற்கு எதிரான சட்டங்களும் கொள்கைகளும் பயன்படுத்தப்படுகின்றன என்பது குறித்து இச்சமூகத்தினரின் விவரணைகள் வழியாக பகுப்பாய்வு செய்தல்.

**ஆராய்ச்சி**

ஆய்வு நடத்தப்படும் அமைவிடங்களாக இடம்பெற்ற ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா மற்றும் மஹாராஷ்டிராவில் இயங்கிவரும் பாலியல் தொழிலாளர்கள் கூட்டமைப்புகளிலிருந்து

ஆய்வுக்குழுவினரை VAMP மற்றும் சங்ராம் தேர்வுசெய்தன மற்றும் ஆய்வு கட்டமைப்பை உருவாக்கின. ஜுன் 2018-ல் பாலியல் தொழிலாளர்களின் மனித உரிமைகள் மீது மனித வணிகத்திற்கு எதிரான சட்டங்களில் பாதிப்பை மதிப்பிடுதல் என்ற தலைப்பின் மீது நடத்தப்பட்ட ஒரு பயிற்சி பயிலரங்கானது, இந்த ஆய்வுக்கான கோட்பாடுகள் அடிப்படையிலான கட்டமைப்பை உருவாக்கியது. ஆய்வின் முறையியல் ரீதியிலான அம்சங்களை ஒரு 'சமூக ஆய்வு வழிகாட்டி' சுருக்கமாக எடுத்தியம்பியது மற்றும் இந்த ஆய்வில் ஈடுபட்ட ஆய்வுக்குழுவினரோடு பகிர்ந்துகொள்ளப்பட்டது.

மனித வணிகத்திற்கு எதிரான சட்டங்கள் மற்றும் கொள்கைகளினால் மனித உரிமை மீதான பாதிப்புகளை ஆராயவும், பகுப்பாய்வு செய்யவும் மற்றும் இவற்றை அரசின் மனித உரிமைகள் பொறுப்புறுதியோடு இணைக்கவும் மற்றும் உரிமைகள் அடிப்படையிலான சான்றுகள் சார்ந்த கொள்கை சீர்திருத்தங்களுக்காக அதிக திறம்பட வாதாட ஆய்வின் முடிவுகளை பயன்படுத்தவும் உதவுகிற ஒரு கருவியான The RighT Guide (உரிமைகளுக்கான வழிகாட்டி)-ஐ இந்த ஆய்வு பயன்படுத்தியது. ஹிந்தி மற்றும் மராத்தியில் மொழிபெயர்க்கப்பட்டு இந்த வழிகாட்டி ஏடானது, அரசின் பொறுப்புறுதி, அறிவு / சான்று அடிப்படையிலான நடவடிக்கை; பங்கேற்பு மற்றும் இணைக்கும் இயக்கங்கள் மற்றும் ஒத்துழைப்பு உறவுகளை உருவாக்குதல் ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆய்வானது, 4 மாநிலங்களிலும், முனைப்பு குழு விவாதங்கள் (14 FGDகளில் 156 பங்கேற்பாளர்கள்), கணக்கெடுப்பு (243 பங்கேற்பாளர்கள்) மற்றும் நேர்காணல்கள் (23) உட்பட முதன்மை ஆதாரங்களை பயன்படுத்தி நடத்தப்பட்டது. 2-ம் நிலை ஆதாரங்களில் நீதிமன்ற முடிவுகள், சட்டங்கள் மற்றும் ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் ஐ.நா. அமைப்புகளுக்கு இந்தியா வழங்கும் அறிக்கைகள் ஆகியவற்றின் பரிசீலனையும் இடம்பெற்றது. வழக்குகளில் ITPA தீர்ப்புகள் மட்டுமின்றி இந்திய குற்றவியல் சட்டத்தொகுப்பு, சிறார்கள் நீதி சட்டம் மற்றும் பிற சட்டங்களும்கூட, ஆய்வுசெய்யப்பட்டன. தரவுகளை பெறுவதற்காக தகவலறியும் உரிமை சட்டத்தின்கீழ் விண்ணப்பங்களும் பயன்படுத்தப்பட்டன.

மனித வணிகத்திற்கு எதிரான சட்டங்கள் மற்றும் கொள்கைகளினால் மனித உரிமை மீதான பாதிப்புகளை ஆராயவும், பகுப்பாய்வு செய்யவும் மற்றும் இவற்றை அரசின் மனித உரிமைகள் பொறுப்புறுதியோடு இணைக்கவும் மற்றும் உரிமைகள் அடிப்படையிலான சான்றுகள் சார்ந்த கொள்கை சீர்திருத்தங்களுக்காக அதிக திறம்பட வாதாட ஆய்வின் முடிவுகளை பயன்படுத்தவும் உதவுகிற ஒரு கருவியான The RighT Guide (உரிமைகளுக்கான வழிகாட்டி)-ஐ இந்த ஆய்வு பயன்படுத்தியது.

கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்கள், சாலைகள், விபச்சார விடுதிகள் என பல்வேறு சூழல்களில் செயலாற்றுகின்ற பாலியல் தொழிலாளர்கள் மீதும் மற்றும் வெளிப்படையாக பாலியல் தொழில் செய்யாத 'மறைந்திருக்கும்' பாலியல் தொழிலாளர்கள் மீதும் மனித வணிகத்திற்கு எதிரான சட்டங்களினால் ஏற்படுகிற பாதிப்புகளை இந்த ஆராய்ச்சி ஆய்வு செய்தது. இந்த கட்டளைவிதிகளின் அடிப்படையில் ஆய்வின் பங்கேற்பாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். ஆய்வின் காலஅளவையும் கடந்து பரப்புரை செயல்திட்டங்களில் ஆய்வு முடிவுகளை முன்னெடுத்துச்செல்ல முடியுமென்பதால் பாலியல் தொழிலாளர்களின் கூட்டமைப்புகள் தீவிரமாக செயல்படும் அமைவிடங்களில் இந்த ஆய்வானது நடத்தப்பட்டது. ஆய்வாளர்கள் மற்றும் இணைந்து செயல்பட்ட கூட்டமைப்புகளின் உறுப்பினர்களோடு நடத்தப்பட்ட ஒரு ஆய்வுப்பரிசீலனை கூட்டத்தில் தொடக்கநிலை முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதன் உள்ளீடுகளும் மற்றும் பரிந்துரைகளும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன மற்றும் ஆய்வில் அதன் முடிவுகள் ஒருங்கிணைக்கப்பட்டன.

நேர்காணல்கள், குழு விவாதங்கள், இல்ல விஜயங்கள் மற்றும் மீட்பு இல்லங்களுக்கு விஜயங்கள் ஆகியவற்றின் வழியாக கோல்காபூர், ஜல்கான், புனே சாங்லி ஆகிய மஹாராஷ்டிராவின் 4 நகரங்களில் 2005 மற்றும் 2017 ஆண்டுகள் இடைப்பட்ட காலத்தில் அதிரடி சோதனையில் பிடிபட்ட 240 பெண்களுக்கான தரவுகள் பெறப்பட்டு தொகுக்கப்பட்டன.

ஆய்வின் அடுத்தகட்டமானது, வடக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு அல்லது சீர்திருத்த இல்லங்களிலிருந்து தப்பிய பெண்களிடம் நடத்தப்பட்டது. மீட்பு இல்லங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகே அதிரடி சோதனைகளில் மீட்கப்பட்டு பல்வேறு கால அளவுகளில் மறுவாழ்வு வழங்கப்பட்ட பெண் பாலியல் தொழிலாளர்கள், அவர்களது பணி விருப்பத்தேர்வுகள் மற்றும் அவர்களது சொந்த விருப்ப முடிவின் பேரில் பாலியல் தொழிலில் இருந்து வருகிற அனுபவங்களை இது மையமாகக் கொண்டிருந்தது.

கூட்டமைப்பகள் மற்றும் விபச்சார விடுதிகளில் பணியாற்றுகிற சிபிஓக்கள் மற்றும் என்ஜிஓக்கள், அதிரடி சோதனைகளின் தரவினை சேகரித்தனர் மற்றும் அச்சோதனைகளில் கைது செய்யப்பட்ட நபர்களை கண்டறிந்து அவர்களிடம் பேசினர். புனே நகரில் அதிரடி சோதனையில் பிடிபட்டு அதன் பிறகு மீட்பு இல்லங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட நபர்களோடும், சமூக ஆய்வாளர்கள் பேசினர். மீட்பு இல்லங்களில் இருப்பவர்கள் நிலையை அறிவதற்காக தகவலறியும் உரிமை சட்ட மனுக்களையும் அவர்கள் தாக்கல் செய்தனர் மற்றும் மீட்பு இல்லங்களிலுள்ள பெண்களிடம் பேசுவதற்காக அங்கு விஜயம் செய்தனர். அப்பகுதிகளில் அதிரடி சோதனைகளில் பிடிபட்டு காவலில் வைக்கப்பட்ட பெண்களிடம் தனிப்பட்ட நேர்காணல்கள் மட்டுமின்றி குழு ரீதியிலான விவாதங்களையும் சமூக ஆய்வாளர்கள் நடத்தினர்.

விடுவிக்கப்படுவதற்கு ஒரு முன்னுதாரணமாக பாலியல் தொழிலை விட்டு விலகி விடுவதாக உறுதியளித்து வாக்குமூலங்களில் கையெழுத்திட்டு நீதிமன்றங்கள் அல்லது மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுகிற என்ஜிஓக்களுக்கு நேர்காணல் செய்யப்பட்ட பல பெண்கள் தந்திருந்த காரணத்தால் மிக கவனமாக பாதிப்பில்லாதவாறு இச்செயல்பாடு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வு முடிவுகள்**

கீழ்வரும் மிக முக்கியமான கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கான சான்றுகளுக்கான தேடலாக இந்த ஆய்வு இருந்தது: நிர்ப்பந்தத்தின் கீழ் பாலியல் தொழிலில் பெண்கள் நுழைந்திருந்தால் சுயவிருப்பத்தின் கீழ் பாலியல் தொழிலுக்கு அவர்கள் ஏன் திரும்ப வர விரும்புகின்றனர்? வேறு பணிகளை செய்வதற்கு திறன்கள் இல்லாத காரணத்தால் இதில் அவர்கள் நுழைந்திருப்பார்கள் என்றால், வருமானம் ஈட்டுவதற்கு உதவியிருக்கக்கூடிய திறன்கள் அவர்களுக்கு கற்பிக்கப்பட்டபிறகு ஏன் அவர்கள் பாலியல் தொழிலுக்கு திரும்பினர்? சூழ்நிலை கட்டாயத்தின் காரணமாக பாலியல் தொழிலில் அவர்கள் நுழைந்திருந்தால், சூழ்நிலைகள் சிறப்பாக மாறியபிறகும்கூட அவர்கள் ஏன் திரும்பவும் வந்திருக்கின்றனர்? அவர்கள் நம்பிய நேர்மையற்ற நபர்களின் ஏமாற்று செயல்/ஆசை காட்டி மோசம் செய்வதன் காரணமாக இதில் அவர்கள் நுழைந்திருந்தால், ஒரு 'புதிய வாழ்க்கையை' தொடங்குவதற்கு ஒரு வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தபோது இத்தொழிலுக்கு ஏன் அவர்கள் திரும்ப வருகின்றனர்? வாழ்க்கை நடத்துவதற்கான விருப்பத்தேர்வு இல்லாத காரணத்தால் அவர்கள் இதில் நுழைந்திருந்தால் இதற்கு மீண்டும் திரும்பவர அவர்கள் ஏன் 'தேர்வுசெய்ய' வேண்டும்?

இந்த ஆராய்ச்சி முடிவுகளின் சுருக்கத்தொகுப்பு கீழ்வருமாறு:

விடுவிக்கப்படுகிற பாதிக்கப்பட்ட நபர்கள் மீது எவ்வித அக்கறையின்மை மற்றும் மதிப்பின்மையையே இத்தகைய அதிரடி சோதனைகளின் ஒட்டுமொத்த செயல்முறையும் வெளிப்படுத்துகிறது. இத்தகைய அதிரடி சோதனைகளில் அவமானம், வாய்மொழி மற்றும் உடல்ரீதியான தாக்குதல்கள் வழக்கமாக இடம்பெற்றுள்ளன.

**ஒழுக்கம் சார்ந்த மற்றும் எதேச்சதிகாரமான சட்டங்கள்**

- இந்த பிரச்சனைக்கு அடித்தளமாக இருப்பது விபச்சாரத்தொழில் (தடுப்பு) சட்டம், 1956 (The Immoral Traffic Prevention Act) (ITPA) என்பதே. இதன் பெயரில் இடம்பெற்றுள்ள பெண்களில் 'ஒழுக்கத்திற்கு மாறான' (immorality) மற்றும் 'மனிதவணிகம்' (traffic) என்ற இரு வெவ்வேறு வார்த்தைகளும் இணைக்கப்பட்டிருப்பதனால், பாலியல் தொழிலாளருக்கு எதிரான அணுகுமுறையே இதன் அர்த்தம் என புரிந்துகொள்ளப்படுகிறது.
- இந்திய உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற சட்டவழக்குகளின் பகுப்பாய்வானது, வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை வெளிப்படுத்தியது. பாலியல் தொழிலை ஒழிக்க வேண்டும் என்று குரல் கொடுத்துவருகிற அமைப்புகள், அவர்களது செயல் உத்தியின் ஒரு அங்கமாக சட்டத்தை துணைக்கு எடுத்திருப்பதையே இது அநேகமாக சுட்டிக்காட்டுகிறது.
- இச்சட்டத்தின் பொருள்வரையறைகள், நீதிமன்றங்களின் ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் உட்பட சட்ட இயந்திரத்தின் செயல்பாடானது, பாலியல் தொழிலை ஒழுக்கத்திற்கு மாறானது என்று வண்ணம் பூசி அதை ஏற்க மறுப்பதாக இருக்கின்றன. வயதுவந்த பெண்கள், அவர்களது குடும்பத்தினரின் கட்டுப்பாட்டில் / கண்காணிப்பின்கீழ் இருக்கும்போது மட்டுமே பாதுகாப்பானவர்களாக இருக்க முடியும் என்று கருதுவதன் மூலம் அவர்களை குழந்தைகளாக நடத்துகின்றனர். ஒரு பாலியல் தொழிலாளரின் வருமானத்திலிருந்து வாழ்க்கையை நடத்துவதை சட்டவிரோதமாக ஆக்குவதால் கஷ்டப்பட்டு சம்பாதிப்பவர்களை குற்றவாளிகளாக பார்க்கிறது; மற்றும் இது அவர்களது வாழ்வாதாரத்தை மட்டும் பாதிக்காமல், விபச்சார விடுதி காப்பாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை பெற்றுத் தருபவர்கள் போன்ற 'மூன்றாம்

தரப்பினரையும்' குற்றவாளிகளாக சித்தரிப்பதன் மூலம் பாலியல் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு வளையத்தையே கடுமையாக பாதிக்கிறது.

- சட்ட அமலாக்க இயக்கமுறைகள், பாலியல் தொழிலாளர்களுக்கு எதிராகவே கடுமையாக இருந்து வருகின்றன. வன்முறை, சிறையில் தள்ளுதல், அபராதம் மற்றும் பலாத்காரணத்தினால் பணம் பறித்தல் போன்ற செயல்களை நியாயப்படுத்த காவல்துறை பல நேரங்களில் இந்த சட்டத்தை பயன்படுத்துகிறது; இதன் மூலம் சட்ட அமைப்பானது பாலியல் தொழிலாளர்களுக்கு சிறிதும் நம்பிக்கை தருவதாக இல்லை.

**அதிரடி சோதனைகள் (ரெய்டுகள்) மற்றும் அதற்கு பிந்தைய சூழல்**

- அதிரடி சோதனைகளின்போது, பாலியல் தொழிலாளர்களின் மற்றும் அக்கட்டிடங்களில் வசிப்பவர்களின் உரிமைகளை கடுகளவும் மதிக்காது காவல்துறை எதேச்சதிகாரமான நடவடிக்கையை மேற்கொள்கிறது. அக்கட்டிடங்களை விபச்சார விடுதிகள் என்று கருதுவதும் சாதாரணமாகும்.
- விடுவிக்கப்படுகிற பாதிக்கப்பட்ட நபர்கள் மீது எவ்வித அக்கறையின்மை மற்றும் மதிப்பின்மையையே இத்தகைய அதிரடி சோதனைகளின் ஒட்டுமொத்த செயல்முறையும் வெளிப்படுத்துகிறது. இத்தகைய அதிரடி சோதனைகளில் அவமானம், வாய்மொழி மற்றும் உடல்ரீதியான தாக்குதல்கள் வழக்கமாக இடம்பெறுகின்றன.

- ஊடகத்தை தவறாக பயன்படுத்துவது மற்றும் அந்தரங்கத்தை காப்பதற்கான உரிமையை மீறுவது, பெண்களை அவமானப்படுத்துவதற்காகவும் மற்றும் அதிரடி சோதனை செய்திகளை பரபரப்பு விஷயங்களாக மாற்றுவதற்கும் காவல்துறைக்கும், ஊடகத்துறைக்கும் இடையிலான கூட்டுசதி.

- காவல்துறையினரால் பாலியல் தொழிலாளர்களை பாலியல் உறவுக்கு நிர்ப்பந்தித்தல் மற்றும் அவர்களிடமிருந்து பலாத்காரமாக பணம் பறித்தல் ஆகியவை, காவல்துறையின் அதிரடி சோதனை அல்லது மோசமாக நடத்துவதிலிருந்து தப்பிப்பதற்கான ஒரு காப்பீடாக பயன்படுத்தப்படுகின்றன

- ஆணுறைகளை உடன் எடுத்துச் செல்கிற பாலியல் தொழிலாளர்களை கைது செய்வதற்கு சட்டத்தை எதேச்சதிகாரமாக பயன்படுத்துவது, ஹெச்ஐவி தொற்று தடுப்பின் மீது எதிர்மறையான பாதிப்பை ஏற்படுத்துகிறது. அத்துடன், அதிரடி சோதனையில் பிடிபட்டவுடன் கட்டாயத்தின்பேரில் பரிசோதனை செய்வதும் மற்றும் ஹெச்ஐவி தொற்று நிலை பரிசோதனை முடிவுகளை வெளியிடுவதும் சட்டத்திற்கு விரோதமானதாகும்.

- பாலியல் தொழிலாளர்கள் மீது சிறிதும் அச்சமின்றி வன்முறையை மேற்கொள்வது, பிற பொதுமக்களும் அவ்வாறே செய்ய தூண்டுகிறது மற்றும் அனுமதிக்கிறது.

- காவல்துறையின் வரம்பு மீறல்கள் ஒரு பொது கருத்தாக்கமாக இருக்கின்றன. சில நேர்வுகளில் கட்டாய தொழில்முறைக்கு நிகரானதாகவும் மற்றும் போலிஸ் காவலில் சித்திரவதை போன்று நடத்தப்படுவதும் இதில் அடங்கும்.

- எந்தவொரு சட்ட செயல்முறையும் தொடங்குவதற்கு முன்னதாகவே காவலில் வைக்கப்பட்டுள்ள பெண்கள், குறை நிவர்த்தி செய்ய அல்லது திருந்துவதற்கான எந்த உரிமையும் இல்லாதவர்களாக குற்றவாளிகள் போலவே நீதிமன்றங்களில் ஆஜராகும்போது நடத்தப்படுவதும் மற்றும் வேண்டுமென்றே அவமானப்படுத்தப்படுவதும் இன்னும் தொடர்கிறது. வழக்குகள் வேண்டுமென்றே புனையப்பட்டவையாக இருந்தபோதிலும் கூட தங்களது குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

**மீட்பு: சிறப்பான வாழ்க்கை அமையும் என்ற பழங்கதை**

- பாலியல் தொழிலிருந்து மீட்கப்படுகிற பெண்கள் சில நேரங்களில் அவர்களின் மறுவாழ்வுக்கான இல்லங்களில் பாலியல் சேவைகளை வழங்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் மற்றும் இதன் மூலம் "மறுவாழ்வு செயல்பாட்டினால் பாதிக்கப்படுபவர்களாக" அவர்கள் ஆகின்றனர்.
- "திறன் உருவாக்கம் / மேம்பாடு" என்பது பெரிதாக வளர்ந்துவரும் கார்பரேட் பொருளாதார சூழலில் பயனற்றதாக இருக்கிறது. தையல் அல்லது அப்பளம் மற்றும் ஊறுகாய் தயாரிப்பது

போன்ற திறன்கள், இச்சூழலில் பொருளாதார ரீதியில் தொடர்ந்து நிலையாக செய்வதற்கு இயலாதவையாகும்.

- நீதிமன்றங்களின் நடைமுறை அம்சங்கள் பாலியல் தொழிலாளர்களுக்கு எதிராகவே கடுமையாக இருக்கின்றன. அதிக வட்டி விகிதங்களில் பெரிய தொகையை கடன் வாங்கி அபராதம் செலுத்துவதற்கு இவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.
- விடுவிக்கப்பட்ட பிறகு, சிறையில் இருந்த காலத்தின்போது வருமானம் ஈட்டும் வாய்ப்பு இழக்கப்பட்டதனால் மிகப்பெரிய கடன் சுமையை பாலியல் தொழிலாளர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. சுரண்டலிலிருந்து பெண்களை பாதுகாக்க முனைகின்ற ஒரு செய்முறையினால் கடனுக்கு அடிமையாகுவது அல்லது சுரண்டல் நடைமுறைகளின் பிற வடிவங்களுக்கு ஆட்படுத்தப்படுவது என்பது வியப்பளிக்கும் ஒரு நகைமுரணாகும்.
- விடுவிக்கப்பட்ட பிறகு, பாலியல் தொழிலாளர்கள் இன்னும் அதிக பாதிப்புக்கு உள்ளாகுபவர்களாக மற்றும் மேலதிக அதிரடி சோதனைகள் நிகழாமல் தடுப்பதற்காக காவல்துறைக்கு பெரிய தொகைகளை கப்பமாக கட்டியிருக்கிற விபச்சார விடுதி உரிமையாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்க வேண்டியவர்களாக ஆகின்றனர். வெவ்வேறு இடங்களுக்கு செல்வதும் மற்றும் குறித்த காலஅளவுகளில் உடல்நல பரிசோதனைகளை செய்வதும்கூட இயலாத காரியமாகிவிடுகிறது.

**கூட்டமைப்புகளின் வழியாக மனித வணிக செயல்பாட்டை எதிர்த்துப்போரிடுதல்**

- பாலியல் தொழிலில் சிறுமிகளும், பெண்களும் ஈடுபடுத்தப்படும் மனித வணிகத்தை எதிர்ப்பதற்கு திறன்மிக்க செயல் உத்திகளை பாலியல் தொழிலாளர்களின் கூட்டமைப்பு சங்கங்கள் உருவாக்கியுள்ளன.

அதிரடி சோதனைகளில் பிடிபடுகிற மற்றும் 'மீட்கப்படுகிற' பாலியல் தொழிலாளர்களில் மிக அதிக சதவீதத்திலான பெண்கள், காவலிலிருந்து விடுவிக்கப்பட்டதற்குப் பிறகு பாலியல் தொழிலுக்கே மீண்டும் திரும்பி இருக்கின்றனர். பாலியல் தொழிலுக்கு மீண்டும் திரும்பி வந்தவர்களுள், பிறரால் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் மட்டுமன்றி தங்களது சொந்த விருப்பமுடிவின்பேரில் இத்தொழிலில் நுழைந்தவர்களும் இருக்கின்றனர். அதிரடி சோதனை மற்றும் மீட்புக்கு பிறகு, பாலியல் தொழிலை தாங்கள் கைவிட்டுவிடுவதாக பொறுப்புறுதி கடிதங்களில் கையொப்பமிட்டிருக்கின்ற நிலையில், தங்களுக்கு மிகப்பெரிய ஆபத்து இருக்கின்றபோதிலும்கூட பலர் பாலியல் தொழிலுக்கே திரும்பவும் வந்திருக்கின்றனர்.

**இந்த புள்ளிவிவரங்கள்**
**நமக்கு எதை**
**தெரிவிக்கின்றன? மற்றும்**
**இந்த புள்ளிவிவரங்களுக்கு**
**பின்னால் உள்ள**
**பெண்களின் குரலுக்கு**
**செவிகொடுக்க நாம்**
**விருப்பம் கொண்டிருக்கிறோமா?**

1. அதிரடி சோதனை நடைபெற்ற நேரத்தில் **0.82% (243 நபர்களில் 2)** நபர்கள் மட்டுமே சிறுமிகள்; எஞ்சியுள்ள அனைவருமே 18 வயதுக்கு மேற்பட்ட வயதுவந்த நபர்கள்
2. அதிரடி சோதனை நடைபெற்ற நேரத்தில் **79% (243 நபர்களில் 193)** நபர்கள், தாங்கள் தங்களது **சொந்த விருப்பத்தின்பேரில் பாலியல் தொழிலில்** ஈடுபடுவதாகவும் மற்றும் "மீட்கப்பட" விரும்பவில்லை என்றும் கூறினர்.
3. பிறரால் **மனிதவணிகத்திற்காக** பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்களில் **36% (36 நபர்களில் 13)**, தற்போது பாலியல் தொழிலை செய்துவருகின்றனர் மற்றும் **இதிலேயே தாங்கள் தொடர்ந்து இருக்க விரும்புவதாக** கூறினர்.
4. விடுவிக்கப்பட்ட பெண்களில் **77% (218 நபர்களில் 168)**, **பாலியல் தொழிலுக்கே திரும்பவும் வந்துள்ளனர்.**

**இறுதி குறிப்பு: முக்கிய அம்சங்கள்**

இத்தகைய அதிரடி சோதனைகளுக்கு உத்தரவிடுகிற மற்றும் நடத்துகிற செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள காவல்துறையினர், என்ஜிஓ-கள் மற்றும் பிற சோதனைகளின்போது அவர்கள் எதிர்கொள்கின்ற

தனிப்பட்ட நபர்களின் சிக்கலான பயணப்பாதையை பொதுவாக உணர்ந்தவர்களாக, அக்கறையுடன் அணுகுபவர்களாக இருப்பதில்லை. இந்த ஒட்டுமொத்த செயல்நடவடிக்கையிலும், 'பாதிக்கப்பட்ட நபர்' என்ற கருத்தாக்கமே தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது அத்துடன் விடுவிக்கப்படுவதாக கூறப்படும் நபர்களின் கருத்துகளுக்கு செவிமடுக்க மறுப்பதும் தொடர்ந்து நிகழ்கிறது. பாலியல் தொழிலில் 18 வயதுக்கு வராத சிறார்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்பதே அதிரடி சோதனைகளை நியாயப்படுத்தும் வழக்கமான காரணங்களுள் ஒன்றாக இருக்கிற போதிலும், அதிரடி சோதனைகளில் பிடிபட்டபவர்களில் மிக மிக குறைந்த சதவீதத்தினரே சிறுமிகளாக இருப்பது அறியப்பட்டுள்ளது. கூடுதலாக, அதிரடி சோதனைகளில் பிடிபட்ட மற்றும் மீட்கப்பட்ட பாலியல் தொழிலாளர்களில் மிக அதிக சதவீதத்தினர், அவர்கள் விடுவிக்கப்பட்டதற்குப் பிறகு பாலியல் தொழிலுக்கே திரும்பியிருப்பதாக ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. பாலியல் தொழிலுக்கு மீண்டும் திரும்பி வந்தவர்களுள், பிறரால் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் மட்டுமன்றி தங்களது சொந்த விருப்பமுடிவின்பேரில் இத்தொழிலில் நுழைந்தவர்களும் இருக்கின்றனர். அதிரடி சோதனை மற்றும் மீட்புக்கு பிறகு, பாலியல் தொழிலை தாங்கள் கைவிட்டுவிடுவதாக பொறுப்புறுதி கடிதங்களில் கையொப்பமிட்டிருக்கின்ற நிலையில், தங்களுக்கு மிகப்பெரிய ஆபத்து இருக்கின்றபோதிலும்கூட பலர் பாலியல் தொழிலுக்கே திரும்பவும் வந்திருக்கின்றனர்.

மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் கண்மூடித்தனமாகவும், வன்முறையானதாகவும், ஆக்கிரமிப்புக்கு ஆளாகக்கூடிய சமூகங்களை அழிப்பதாகவும் இருக்கின்றன என்பது நிருபிக்கப்பட்டிருப்பது மட்டுமின்றி, பாலியல் தொழிலில் சிறார்கள் ஈடுபடுத்தப்படும் மற்றும் வயதுவந்த நபர்கள் கட்டாயத்தின்பேரில் அதில் ஈடுபடுத்தப்படும் பிரச்சனைக்கு தீர்வுகாண்பதில் பயனற்றதாக இருந்திருப்பதும் ஆய்வில் அறியப்பட்ட சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன. இதுவரை தொடர்ந்து பல ஆண்டுகளாக நடத்தப்பட்டுவரும் காவல்துறையின் அதிரடி சோதனைகளால், பாலியல் தொழிலில் மனித வணிகத்திற்காக பெண்கள் கடத்தப்படும் பிரச்சனைக்கு தீர்வுகாண இயலவில்லை.

இந்த இருள் நிறைந்த சுரங்கப்பாதையின் இறுதியில் தென்படுகிற ஒரே வெளிச்சம், எச்சரிக்கை விழிப்புணர்வோடு செயல்படுகிற பாலியல் தொழிலாளர்களின் கூட்டமைப்பு சங்கங்களிலிருந்து தான் வருகிறது. தங்களது சொந்த வாழ்க்கையில் நிகழ்கிற வன்முறை மற்றும் சுரண்டலை வேரோடு அறுப்பதோடு மட்டுமன்றி பாலியல் தொழிலில் மனிதவணிகத்திற்காக பிறரால் ஈடுபடுத்தப்படுகிற சிறார்கள் மற்றும் பெண்களின் துயரை தீர்ப்பதற்காகவும் தங்களையே ஒருங்கிணைத்து செயல்பட இவர்கள் முனைந்துள்ளனர். எந்தவொரு சமூகத்திலும் பாதுகாப்பிற்கு பதிலாக வன்முறையை தூண்டுகிற காவல்துறையின் அடக்குமுறையை பயன்படுத்துகிற ஒரு மீட்பு நடவடிக்கையை 'வெளியிலிருந்து' மேற்கொள்ளமுடியும் என்ற கருத்தானது இப்பிரச்சனையை இன்னும் பெரிதாக்குகிறது.

குறிப்பிட்ட ஒரு விபச்சார விடுதியைச் சேர்ந்த அல்லது சமூகத்திலுள்ள பாலியல் தொழிலாளர்களின் பங்கேற்பு இல்லாமல் அதிரடி சோதனை மற்றும் மீட்பு நடவடிக்கையின் செயல்ஊக்கியானது, பாலியல் தொழில் கட்டாயமாக நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள பெண்களுக்கு எந்த பாதுகாப்பையும் தருவதில்லை. இந்த விவாதத்தின் மையப் பொருளாகவுள்ள பெண்களின் குரல்கள் இன்னும் பெரிதாக்கப்பட்டு கேட்கப்படுமானால், இது ஒருவேளை அதிக தெளிவினை வழங்கும்.

இந்த ஆய்வானது, இந்தியாவில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், மனித உரிமைகள் ஆய்வு முகமைகள் மற்றும் பாலியல் தொழிலாளர் கூட்டமைப்புகள் ஆகியவற்றுக்கிடையிலான ஒரு கூட்டாண்மை செயல்பாட்டின் விளைவாகும். இந்த ஆய்வானது, பாலியல் தொழிலாளர்களின் வேஷ்யா அன்யய் முக்தி பரிஷத் (VAMP), இந்தியாவில் சங்ராம் (SANGRAM) என்ற அரசு சாரா தொண்டு நிறுவனம் மற்றும் நெதர்லாந்தைச் சேர்ந்த ரைட்ஸ்4சேஞ்ச் என்ற அமைப்புகளால் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. இந்தியாவில் இந்த ஆய்வுக்கான கூட்டாளிகளாக வேஷ்யா அன்யய் முக்தி பரிஷத், சஹேலி HIV/AIDS கார்யகர்த்தா சங் மற்றும் ஆதார் பஹுஉத்தேஷ்யா சன்ஸ்தா, மஹாராஷ்டிரா, உத்தர கர்நாடகா மஹிள ஒக்குட்டா, கர்நாடகா, கேரளா நெட்வொர்க் ஆ்ஃப் செக்ஸ் ஒர்க்கர்ஸ், கேரளா மற்றும் ஸ்ரீஜன் ஃபவுண்டேஷன், ஜார்கண்டு ஆகியவை இருந்தன. இந்த ஆய்வு கீழ்க்கண்ட நோக்கங்களை இலக்காகக் கொண்டிருந்தது.

கீழ்வரும் மிக முக்கியமான கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கான சான்றுகளுக்கான தேடலாக இந்த ஆய்வு இருந்தது: நிர்ப்பந்தத்தின் கீழ் பாலியல் தொழிலில் பெண்கள் நுழைந்திருந்தால் சுயவிருப்பத்தின் கீழ் பாலியல் தொழிலுக்கு அவர்கள் ஏன் திரும்ப வர விரும்புகின்றனர்? வேறு பணிகளை செய்வதற்கு திறன்கள் இல்லாத காரணத்தால் இதில் அவர்கள் நுழைந்திருப்பார்கள் என்றால், வருமானம் ஈட்டுவதற்கு உதவியிருக்கக்கூடிய திறன்கள் அவர்களுக்கு கற்பிக்கப்பட்டபிறகு ஏன் அவர்கள் பாலியல் தொழிலுக்கு திரும்பினர்? சூழ்நிலை கட்டாயத்தின் காரணமாக பாலியல் தொழிலில் அவர்கள் நுழைந்திருந்தால், சூழ்நிலைகள் சிறப்பாக மாறியபிறகும்கூட அவர்கள் ஏன் திரும்பவும் வந்திருக்கின்றனர்? அவர்கள் நம்பிய நேர்மையற்ற நபர்களின் ஏமாற்று செயல்/ஆசை

காட்டி மோசம் செய்வதன் காரணமாக இதில் அவர்கள் நுழைந்திருந்தால், ஒரு 'புதிய வாழ்க்கையை' தொடங்குவதற்கு ஒரு வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தபோது இத்தொழிலுக்கு ஏன் அவர்கள் திரும்ப வருகின்றனர்? வாழ்க்கை நடத்துவதற்கான விருப்பத்தேர்வு இல்லாத காரணத்தால் அவர்கள் இதில் நுழைந்திருந்தால் இதற்கு மீண்டும் திரும்பவர அவர்கள் ஏன் 'தேர்வுசெய்ய' வேண்டும்?